39

# Chennai Metropolitan Development Authority

## PLANNING PERMIT

(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 12845

Date of Permit 20.09.2019

B/NHRB/262/2019
A-C

File No. PP/SB/C/61/2019

Name of Applicant with Address 1. StepStone Promoters Pvt Ltd and 2. K.Mothish Kumar
1/1, Lake Area 1st Main Road, Valluvarkottam, Nungambakkam, chennai-34

Date of Application 11.3.2019

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Charge in use of Land/Building~~
PP for the Proposed construction of Group Development of Residential building with 2 blocks Block A having Stilt + 5 Floors with 42 dwelling units and Block B having Stilt + 5 Floors with 50 dwelling units totally 92 dwelling units at Senthurpuram Extn, Kattupakkam, chennai comprised in S.No. 479/1A1B & 479/1A1C of Mangadu village and S.No. 108/1B of Srinivasapuram village within Mangadu Town Panchayat and Kundrathur Panchayat Union limit

Site Address..................

Division No.................

Development Charge paid Rs. 4,08,000/- Challan No. B0012855 Date 10.1.19

PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/building construction/~~change in use of land/building~~ according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 19.09.2024

the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

(signature) 20/9/2019

For MEMBER SECRETARY

(initials) 19/9/19

Scanned by CamScanner

41

<u>மாங்காடு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் ... ாகள்</u>

<u>பிறப்பிப்பவர்:– திரு.த.குணசேகரன்,</u>

க.உ.எண் : 169/2019-20

மூ.மு.எண் :422/2019 நாள்.30.10.2019

பொருள்:- கட்டிட வரைபட அனுமதி – மாங்காடு பேரூராட்சி – மாங்காடு கிராமம்– மாசிலாமணிநகர் - நில அளவை எண். 479/1A1B& 479/1A1C, பட்டா நில அளவை எண்.108/1B - புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் இரண்டு பிளாக்குகள் – A பிளாக் வாகன நிறுத்துமிடம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட 42 குடியிருப்புகள் மற்றும் B பிளாக் வாகன நிறுத்துமிடம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட 50 குடியிருப்புகள் மொத்தம் 92 குடியிருப்புகள் / சுற்றுசுவர் / கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்குதல் – சார்ந்து.

---

பார்வை:-

1. **M/S.Steps Stone Promoters, Rep.by its Director Thiru.A.S.Gopinath and Thiru.K.Mothishkumar**, நுங்கம்பாக்கம், சென்னை–34 என்பவரின் விண்ணப்பம்.
2. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடித எண்.PP/SB/C/061/2019, நாள்.20.09.2019.
3. வரைபட அனுமதிக் கட்டணம் ரூ.8,05,500/– செ.சீ.எண். 1222 /2019–20 நாள்.29.10.2019 (வங்கி கேட்பு உண்டி எண்.258991, நாள்.24.10.2019).
4. த.நா கட்டுமான தொழிலாளர் நலநிதி ரூ.1080100/– (வரைவோலை எண்.258990/நாள்.24.10.2019)
5. உரிய பிற ஆவணங்கள்

STEPSSTONE PROMOTERS PRIVATE LTD. Chennai-94.

******

ஆணை:

காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மாங்காடு கிராமம், நில அளவை எண்.479/1A1B& 479/1A1C, பட்டா நில அளவை எண்.108/1Bல் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் இரண்டு பிளாக்குகள், A பிளாக்கில் வாகன நிறுத்துமிடம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட 42 குடியிருப்புகள் மற்றும் B பிளாக்கில் வாகன நிறுத்துமிடம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட 50 குடியிருப்புகள் மொத்தம் 92 குடியிருப்புகள் கட்ட வரைபட அனுமதி கோரிய **M/S.Steps Stone Promoters, Rep.by its Director, Thiru.A.S.Gopinath and Thiru.K.Mothishkumar** என்பவராகிய தங்களது விண்ணப்பம் பார்வை 2ல் காணும் உறுப்பினர் செயலர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வரைபட அனுமதியின்படி பார்வை 3 மற்றும் 4ல் காணும் விவரப்படி உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டது.

எனவே மாங்காடு கிராமம், 479/1A1B& 479/1A1C, பட்டா நில அளவை எண்.108/1Bல் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் இரண்டு பிளாக்குகள், A பிளாக்கில் வாகன நிறுத்துமிடம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட 42 குடியிருப்புகள் மற்றும் B பிளாக்கில் வாகன நிறுத்துமிடம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட 50 குடியிருப்புகள் மொத்தம் 92 குடியிருப்புகள் / சுற்றுசுவர் / கிணறு / கழிப்பிடம் / குளியலறை ஆகியவை கட்டுவதற்கு **M/S.Steps Stone Promoters, Rep.by its Director, Thiru.A.S.Gopinath and Thiru.K.Mothishkumar** என்பவர் பெயரில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது 29–10–2022ம் தேதி வரை மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

<u>நிபந்தனைகள்:</u>

1. கட்டிடத்தின் முன் பக்கத்திலும் பின்பக்கத்திலும் மற்றும் இரு பக்கங்களிலும் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும். மேலும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கான செயல்அலுவலருக்கு எடுத்து வழங்கப்பட்டுள்ள வங்கி வரைவோலை தொகையில் ரூ.8,05,500/–தணிக்கை நடைபெறும் காலகட்டத்தில் நிலுவை தொகை இருப்பின் தங்களால் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த பத்திரத்தில் சொல்லப்பட்டதன் அடிப்படையில் தொகை கட்ட வேண்டும்,

2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் 1994–ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் படி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுபாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமனம் செய்வது கூடாது.

4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ பேரூராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக் கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரை படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட கால மூன்று வருட கால வரையறைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. கட்டிட வேலை துவங்குவதற்கு முன்னால் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளுக்கான வடிவமைப்புகளுக்கு உரிய அனுமதியை சென்னை குடிநீர் வாரியத்திடமிருந்து பெறப்படடு இப்பேரூராட்சிக்கு சமர்பிக்கவேண்டும்

7. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரேமேற்கொள்ள வேண்டும் . குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்டபின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிடமுனைவரே அதை பராமரிக்க வேண்டும்

8 அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழைநீர் மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருக்கும் ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்குறியதாகவும் வளச்சிக்கட்டுபாடு விதிகளுக்கு முரணாணதாவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்

9. கிணறுகள் மேல்நிலை தொட்டிகள் மற்றும் கழிவுநீர்தொட்டிகள் சுகாதார முறையில் உறுதியாக மூடப்பட்டு கொசு தொல்லைகள் இல்லாமல் பார்த்துகொள்ளவேண்டும்.

10. சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் விண்ணப்பதாரர் கடைபிடிக்கவேண்டும்.

11. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் செயல் அலுவலருக்கு விண்ணப்பம் செய்து ஆணை பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

12. கட்டிடம் கட்ட ஆணை பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி ஆணையை ரத்து செய்ய செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.

13. புதியதாக கட்டப்படும் கட்டிடத்தில் மழை நீர் சேகரிப்பு தொட்டி தவறாமல் அமைத்திடல் வேண்டும். மேலும் ஒப்புறுதி பத்திரத்தின்படி அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டவாறு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்ட பின்னரே சொத்துவரி விதிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

STEPSSTONE PROMOTERS PRIVATE

Scanned by CamScanner

43

14. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொதுச் சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்திருத்தல் அவசியம்.

15. மனுதாரர் கட்டிடத்தை கட்டிமுடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.

16. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புரப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

17. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து அனுமதி பெற்றிருத்தல்

18. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இப்பேரூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

19. கட்டிட வேலை முடிந்த பின்பு 15 தினங்களுக்குள்ளாக செயல் அலுவலருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

20. குடியிருப்புகளில் தினசரி சேகரமாகும் குப்பைகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்கப்பட வேண்டும்.

21. மேலும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

செயல் அலுவலர்
மாங்காடு சிறப்பு நிலை பேரூராட்சி
சென்னை 600 122.

30 x 49

இணைப்பு :–
அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் – 2.

பெறுநர் :–
**M/S.Steps Stone Promoters,**
**Rep.by its Director Thiru.A.S.Gopinath**
**and Thiru.K.Mothishkumar**
எண்.1/1, லேக் பகுதி, முதல் மெயின் ரோடு,
வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம்,
சென்னை–34.

STEPSSTONE PROMOTERS PRIVATE LTD.

Scanned by CamScanner